முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1245

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.02.2023, சனிக்கிழமை**

1. பிரம்ம சூட்சுமம் அறிந்த அரங்கனே
   பிரணவ சித்திமிகு குருராஜனே
   வரம்பல உலகமகா சக்திகளிடம்
   வல்லமையாக பெற்றுவந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 13 ம் நாள், 25.02.2023 சனிக்கிழமை)
   வரமென உன் அவதார நோக்கம்
   வையகத்தை ஞான லோகமாக மாற்றும்
3. மாற்றம்தரும் உயர்தொண்டர்களை நீபடைத்து
   மண்ணுலகில் ஞானஆட்சி நிறுவுவாயப்பா
   அப்பனே உன் தொண்டர்களுக்கு
   ஆறுமுகன் யான் ஆக்கமாக அனைத்து சக்தியாகமாறி
4. மாறியே இந்த உலகினில் அற்புதத்தை
   மகான் உன் அரங்கன் வழியாக நடத்தி அருள்வேன்
   ஆறுதலாக உலகமெங்கும் தர்மம் பெரும் சக்தியாக
   அண்ணலாக உருவெடுத்து இந்த பேருலகில்
5. பேருலகில் அறமே தலையாய தலைமையாகமாறி
   அகிலத்தில் ஞானவான்கள் படைபெருகி
   வரமென ஞானிகள் ஆட்சியும்
   வையகத்தைக் காக்கும் உன்னதமான தலைமையும்பெருகி
6. பெருகியே ஆறுமுகன் யான் வெளிப்பட
   பிசகின்றி இந்த அற்புதம் சடுதி நடக்கும்
   நடக்கவே அரங்கன் உன்வழி
   நாட்டிடுவேன் ஆறுமுகன் யான் சூட்சும சக்தியாக இருந்து இயக்குகின்றேன்
7. இயக்கமும் அனைத்து தர்மமும் அன்பர்களின் கூட்டமும்
   அனைத்துமாக ஆறுமுகன் வழிநடத்திவர
   அரங்கன் உன் நோக்கம் சடுதி வெற்றிகாணும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–